சொத்து வரியின் காரணமாக வழக்காடு மன்றங்களுக்குச் சென்றவர்கள் கோவை மாநகரத்திலேதான் அதிகமாக இருக்கிறார்கள். பண வசதி இருந்தாலும் மனதிலே இடமில்லாத காரணத்தால் இப்படிப்பட்ட நிகழ்வுகள் அங்கே நடைபெற்றிருக்கின்றன. இருந்தாலும்கூட, கன்சிலியேஷன் என்ற அடிப்படையிலே அங்கேயிருக்கின்ற வியாபாரிகளையும், தொழிலதிபர்களையும் தற்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற மாநகராட்சியினுடைய ஆணையாளரவர்கள் அழைத்துப் பேசி நிதி வசூல் செய்வதிலே, மாநகராட்சியினுடைய நிதியாதாரத்தைப் பெருக்குவதிலே முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாளை வர இருக்கின்ற மானியக் கோரிக்கையிலே எழில்மிகு கோவை 2000 என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய நல்லாசியோடும், ஆணையோடும் அறிவிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 378, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

378–

அம்பாசமுத்திரத்தில் குடிநீர்த் திட்டத்திற்கு நிலங்கள் கையகப்படுத்தல்

**21259-திரு. ஆர். முருகையா பாண்டியன்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றத்தின் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கு நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அம்பாசமுத்திரம் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலங்கள் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்போது தேவையான இடங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு இனாமாகக் கொடுக்க அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றம் சம்மதித்துள்ளதால் அவ்விடங்களை மட்டும் கையகப்படுத்த குடிநீர் வடிகால் வாரியம் உத்தேசித்துள்ளது.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் நடைபெற்றிருக்கிற குடிநீர்த் திட்டம் கிட்டதட்ட 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்டது. அப்போதிருந்த ஜனத்தொகைக்கு அது போதுமானதாக இருந்தது. ஆனால் இப்போது நான்கு மடங்காக அதுபோன்ற ஜனத்தொகை கூடிவிட்ட காரணத்தால் அங்கே குடிநீர்ப் பற்றாக்குறை மிகவும் அதிகமாக இருக்கிறது. இந்தக் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்பதற்காக, கிட்டத்தட்ட ரூ. 60 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டதாகவும் அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே எங்களுடைய குடிநீர்த் திட்டத்தை விரைவிலே இந்த ஆண்டு நிறைவேற்றித் தரவேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன அம்பாசமுத்திரம் பேரூராட்சிக்கு தாமிரபரணி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ. 57.92 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசினுடைய நிர்வாக ஒப்புதலுக்காக அந்தத் திட்ட மதிப்பீடும், அந்தத் திட்டத்தினுடைய வடிவமைப்பும் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு கூடிய விரைவிலே அந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி இந்தத் திட்டத்தை கூடிய விரைவிலே செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 379, டாக்டர் ஜெ. பரந்தாமன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

379–

வாணியம்பாடி வட்டத்தில் பிந்து மாதவர் திருக்கோயிலைப் புனரமைப்பு செய்தல்.

***24515**—டாக்டர் ஜெ. பரந்தாமன்:*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—